பதிவு எண்—M 6720.   வெள்ளிக் கிழமையில்   குருகுலத் தாள்

646

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–6   குருகுலம், மாம்பாக்கம்;   விசய, மாசி; 12—2—54   தளிர்–17

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## வாழ்க்கையில் தாழ்வா?

பிறவியெடுத்த மனிதர் ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் ஏதாவது ஒரு நற்றொண்டு செய்துவரவேண்டும்; இது முடிந்த முடிபு; தீர்ந்த தெளிவு.

அந்த நற்றொண்டு அவரை அருளாளராய் உயர்த்தும்; பிறவி கெடுத்துப் பேரின்பப் பெருவாழ்வில் நிலைபெறுத்தும்.

எடுக்கும் நற்றொண்டைப் புகழ் காரணமாகவும் வேறு பயன் காரணமாகவும் செய்வது நல்லதன்று; அது தன்னலமாய் முடியும்; தனக்கு என்னும் தன் முனைப்பும் உண்டாகும். அதனால் யான் எனது என்னும் இருவகைச் செருக்கும் உண்டாக ஏதுவாகும்.

ஆயினும், எடுத்தது நற்றொண்டாதலால், அதனைத் தீய முறையின்றி நடத்தினால், இருவினைகளில் ஓரளவுக்குத் தீவினை ஏறாமல் இருக்கும்; ஆனால், நற்றொண்டுகளைப் பயன் கருதிச் செய்தால் நல்வினை மிகுந்துகொண்டிருக்கும்.

இனி, நடுநிலையாக நற்றொண்டுகள் செய்து வருதலும் ஒரு திறம்; அதுதான் பெரிய திறம்! நடுநிலையாகச் செய்தல் என்றால், தன்னலம் பயன் முதலியன கருதாமல் செய்துவருதல் என்று பொருள். அப்போது யான் எனது என்னும் இருவகைச் செருக்கும் இல்லையாகும்; அருளில் நிற்றலாகும்.

இவ்வாறு நற்றொண்டு செய்வார்க்குப் புதுவினைகளும் ஏறா; பழவினைகளும் அறும்; பிறந்த பிறவியில் நுகரவந்த வினையும், முழுதும் தாக்காது; ஓரளவு நிகழ்ந்து கெடும். அவ்வளவோடு வினை முற்றும் அற்றுப் பேரின்ப அருள்நிலை அமைந்துவிடும்.

பிறந்த பிறவியில் நுகரவந்த வினை ஓரளவு தாக்குங்கால், ஏதோ தாழ்வு நேர்வதுபோல் பிறர்க்குத் தெரியும்; ஆனால், உயர்ந்தோர்க்கு அவ்வாறு தோன்றாது; நடுநிலையோடு அதாவது அருள் நிலையில் நின்று நற்றொண்டு புரிவார்க்கு, வாழ்க்கையில் ஏதேனும் வறுமை முதலிய தாழ்வுகள் சேர்ந்தால் அதனை ஒரு கெடுதலாக உலகம் கருதாது; வினைக் கழிவாகவே உலகம் கருதும். ஆ! நடுநிலையாகத் தொண்டு செய்தல் வினைக் கழிவுக்கு எவ்வளவு நல்லது!

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு—நடுநிலையாக நற்றொண்டுகளில் நிலைபெற்றிருப்பவனது வாழ்க்கைச் சரிவை, கெடுவாக வையாது உலகம்—உயர்ந்தோர் கேடு என்று கருதார்.

கெடுதல் என்பது 'கெடு' என்று நின்றது; இது போல்வதை முதனிலைத் தொழிற் பெயர் என்பர் ஆசிரியர்; வையாது—மனத்துள் வையாது; உலகம் என்றது, உயர்ந்தோரை; அவர் ஆழ்ந்து கவனிப்பவராதலின், அவ்வாறு கூறினர்.

நன்றி என்றது, நல்ல துறைகளை; அறத் துறைகள்; தங்கியான் என்றார் வழுவாதும், தளராதும், இடைவிடாதும் நிற்பவன் என்றற்கு. தாழ்வு இங்கு வாழ்க்கைச் சரிவைக் குறித்தது; அது வறுமை உறவினரின்மை முதலிய இன்னல்களால் இடை நடுவில் தாக்குண்டு வரும் நிலைமை. அது, பழவினையால் வந்து புனிதத்துக்கு வழி செய்தலால், 'கெடுவாக வையார்' என்றார்.

"முல்லைக் கொடி"
(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | |
|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 0 |
| தனித் தாள் | | 0 | 1 0 |
| ஆயுள்— | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—
குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| கிளை | விசய, தை, | தளிர் |
|---|---|---|
| 6 | 12-2-54 வெள்ளி | 17 |

# எதிர்காலத் தமிழகம்

தமிழ் நிலம் மிகப் பழமை யானது. தமிழ் நாடு மிகவும் வள முடையது. தமிழ் நாட்டு மலை களும் ஆறுகளும் செல்வம் கொழிப்பன. தமிழ்நாட்டுக் கடல் கள் பரந்து விரிந்திருப்பன. தமி ழர் கைத்தொழிலும் வாணிக மும் கிறிஸ்து பிறப்பதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன் பேயே சிறந்து விளங்கியவை. தமிழ் மக்கள் தனிப் பண்பு உடையவர்கள். ஒழுக்கத்திற்கு உயர்வு தருபவர்கள். தமிழ்ப் பெண்கள் அன்பில் நிறைந்து, கற்பில் சிறந்து, வீரத்தில் உயர்ந்து விளங்கியவர்கள். தமிழ் மொழி பழமை உடை யது, என்றும் இளமை உடை யது, தனித்து இயங்குவது. தமிழ் இலக்கணம் தனி உயர்வு பெற்றது. தமிழர் கலை நுட்ப முடையது. தமிழர் நாகரீகம் தரணியில் சிறந்தது. தமிழ் இலக்கியமாகிய திருக்குறள் உலகில் அதிகமான மொழி களில் மொழி பெயர்க்கப் பெற்று முதன்மை வகிப்பது. தமிழ் மன்னர்கள் இமயம் வரை சென்று அங்குத் தங்கள் புலிக் கொடி, விற் கொடி, மீனக் கொடிகளைப் பொறித்து வந்த வர். இப் பரந்த உலகில் 8000 ஆண்டுகள் தொடர்ந்து அரசு புரிந்து வந்தவர் தமிழ் மன்னர் களே. இமயமும், கங்கையும், வங்கமும், கலிங்கமும் மட்டு மல்ல; பர்மாவும், கடாரவும் மலாயாவும், இலங்கையுங்கூடத் தங்களை ஆண்ட தமிழ் மன்னர் களின் வரலாறுகளை இன்றும் கூறிக்கொண்டிருக்கின்றன. இவையனைத்தும் பழமைச் சிறப்புக்கள்.

இன்றைய தமிழகம் 2 லட் சத்து 50 ஆயிரம் நாற்புற மைல்கள் பரப்பளவையுடை யது. தமிழ் மக்களின் எண் ணிக்கை 3 கோடி. இவ்விதமிருந் தும் தமிழகத்திற்கென்று ஒரு அமைப்பில்லை. தமிழ் மொழிக் கென்று ஒரு கழகமில்லை. தமிழ் மக்களுக்கென்று ஒரு தலைவ னில்லை. இல்லாமற் போனாலும் பரவாயில்லை. எவனெவனோ தன்னைத் தலைவனென்று சொல் லிக்கொண்டு தமிழ் நாட்டிற் கும், மொழிக்கும், மக்களுக்கும் செய்யும் கேடுகளுக்கு அளவே யில்லை. இதை ஏனென்று கேட் பாருமில்லை. கேட்க முன் வருப வரை ஆதரிப்பதுமில்லை. நேர்மை உடையவரைப் போற் றுவதுமில்லை. போராடி உழைக்க நேர்மை உடையவர் களுக்கு வாய்ப்பும் ஓய்வும் கிடைப்பதில்லை. பொது மக்க ளுக்கு உழைக்க முன் வருபவர் களின் உள்ளத்தில் நேர்மை யிருப்பதில்லை. பணம், பட்டம், பதவி முதலியவைகளில் வெறி கொண்டு தன்னலம் கருதும் மக்கள் பொதுவாழ்வில் புகுந்து கொண்டனர். பொதுத் தொண்டு ஒரு வியாபாரமாய் விட்டது. அரசியலில் அயோக் கியத்தனம் மலிந்து விட்டது. நாடு பாழாயிற்று. மொழி அழி யத் தொடங்கியது. மக்கள் இழிவெய்தினர்.

தமிழ் நாட்டின் வட எல்லை ஆந்திரத்திற்கு அடிமையா யிற்று. தென் எல்லையை மலை யாளம் கொள்ளை கொண்டது. மேற்கெல்லை கன்னடத்தில் மறைந்துவிட்டது. கிழக்கெல்லை பிரஞ்சிற்குச் சொந்த சொத்தா யிற்று. நடுவில் தமிழகம் கூனிக் குறுகிப் போயிற்று. இதற்கும் "தமிழ் நாடு" என்று பெய ரில்லை. பெயரிட்டழைக்க எவ ரும் விரும்பவுமில்லை. எஞ்சிய சென்னை மாகாணமென்று முன் பும், வெறுஞ் சென்னை மாகாண மென்று பின்பும் கூறுகின்றனர். இவ்வாறு கூறுகின்றவர்களை ஏன்? என்று கேட்க நாதியு மில்லை. இது இன்றுள்ள தமிழ் நாட்டின் நிலை.

தமிழ் மொழி பாதுகாப்பின்றி அழியத் தொடங்கி விட்டது. மொழிக்கு உரிமையுடைய தமி ழறிஞர்கள் எல்லாம் ஒதுங்கி இருக்கின்றார்கள். எவரெவரோ மொழியில் கையை வைத்தார் கள். தமிழ் மொழியில் பல மொழிகளைக் கலந்து வந்தார் கள்; இப்போது எழுத்துச் சீர்த் திருத்தமென்று தமிழ் எழுத்துக் களை ஒழிக்க வந்திருக்கிறார்கள். தமிழ் மொழியில் தமிழ் எழுத்தில், பிற மொழிகளை, எழுத்துக்

களை, கலந்தால்தான் தமிழ் வளரும் என்று கூறுகிறார்கள். இப்படிச் சொல்லுகிறவர்கள் தங்களைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். தமிழில் வடமொழியும் ஆங்கிலமும், இந்தியும் கலந்து எழுதிப் பேசவேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிற இவர்கள் தங்களைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் என்று கூறிக் கொள்வதைவிட தமிழ் அபிவிருத்தி அசோசியேஷன் வாலாக்கள் என்று கூறிக்கொள்வது மிகப் பொருத்தமாக இருக்கும். இத்தகைக் கூட்டத்தாருள் தமிழ் நலம் கருதும் தமிழறிஞர்கள் எவருமிருப்பதில்லை. தமிழ் நலம் கருதுவோர் ஒன்று கூடி ஒரு குழு அமைத்துச் செயலாற்றுவதுமில்லை. செயலாற்றினும், அதைப் போற்றுவதுமில்லை; தமிழ்ப் பகைவர்கள் தமிழ் விழாக் கொண்டாடத் தொடக்கிவிட்டனர். தமிழை வளர்ப்பதாகச் சொல்லிக் கொண்டே அதற்குப் பிணப் பறை அடிக்கின்றனர். சென்றவிடங்களிலெல்லாம் தமிழைக் கொலை செய்கின்றனர். தமிழ்க் கொலை செய்வோரைப் பாராட்டிப் பெருமைப் படுத்துகின்றனர். தமிழ் நூல்கள் ஒன்றின்பின் ஒன்றாய் அழிந்து வருகின்றன. தமிழ் அறிஞர்கள் ஒருவர்பின் ஒருவராய் மறைந்து வருகின்றனர். தமிழ்ப் புலவர்கள் வறுமையால் வாடி வதங்குகின்றனர். தமிழ் ஆசிரியர்களுக்குச் சம்பளமும் குறைவு. தமிழ் நாட்டுப் பள்ளிகளில் தமிழுக்கு முதன்மையில்லை. தமிழைப் படிக்க வேண்டுமென்பது கூட இல்லை. படிக்கின்ற பாட புத்தகங்களில், தமிழ், தமிழர், தமிழகத்தின் வரலாறுகளோ, சிறப்புகளோ எதுவும் இருப்பதில்லை. இருந்தாலும் அது பாட புத்தகக் குழுவால் அங்கீகரிக்கப்படுவதுமில்லை. பாட புத்தகக் குழுவில் உணர்ச்சியுள்ள தமிழறிஞர்கள் இருப்பதில்லை. இருக்கும் தமிழறிஞர்களை அரசாங்கம் அக்குழுவுக்குத் தேர்ந்தெடுப்பதுமில்லை. இந்த அளவோடு அரசாங்கம் சும்மாயிருந்தாலும் பரவாயில்லை. தமிழ் மொழியை வட மொழி எழுத்துக்களைக் கொண்டு எழுத வேண்டுமென்று முடிவு செய்து அதை நிறைவேற்றத் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறது. அது அமுலுக்கு வருகிற நாள் எப்போது? என்பது தெரியவுமில்லை. வந்தால் என்ன ஆகும்? என்பது புரியவுமில்லை. இது இன்றுள்ள தமிழ் மொழியின் நிலை.

தமிழ் நாட்டின் மேற்கெல்லையில் கன்னடம் படிக்கும்படியும், தெற்கெல்லையில் மலையாளம் படிக்கும்படியும், வடக்கெல்லையில் தெலுங்கு படிக்கும்படியும், கிழக்கெல்லையில் பிரஞ்சு படிக்கும்படியும், தமிழ்ப் பிள்ளைகள் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். கேட்க நாதி இல்லை, என்று வருந்துவதற்குக் கூட நேரமில்லை. ஏனெனில் நடுவில் உள்ள தமிழ்ப் பிள்ளைகளும் இந்திபடிக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இது தமிழ் நாட்டில் தமிழ்ப் பிள்ளைகள் தமிழுணர்ச்சி பெறுகின்ற வழி.

தமிழ் நாட்டினைத் தவிர பிற நாட்டினரெல்லாம் தங்களை, ஆந்திரர், வங்காளி, பஞ்சாபி, மலையாளி என்றே கூறுகின்றனர். தமிழன் மட்டும் இன்னும் தன் ஜாதிப் பெயரையும், வாழும் ஊரையுமே கூறிக் கொண்டிருக்கிறான். "தமிழ் நாடு" என்றோ, "தமிழன்" என்றோ கூறுகின்ற உணர்ச்சி சிறிதுமில்லை. இதுவே இன்றைய தமிழ் நாட்டின் நிலை.

தமிழ் மக்களைக் 'கறுப்பன்' என்று வெள்ளையரும் 'இந்தியன்' என்று பிறரும் 'சூத்திரன்' என்று பார்ப்பனரும், 'பார்ப்பனரல்லாதார்' என்று ஜஸ்டிஸ் கட்சியும், 'முஸ்லிம் அல்லாதார்' என்று அரசாங்கமும், 'கிள்ளங்கி' என்று மலாய்க்காரரும், 'திராவிடர்' என்று ஆரியரும், 'அஞ்ஞானி' என்று பாதிரிமார்களும் பெயரிட்டு அழைத்தனர். தமிழனைத் தமிழனென்று எவரும் கூறவில்லை. பிறர் கூறாவிட்டாலும் தமிழனாவது தன்னைத் தமிழன் என்று கூறிக் கொள்ளுகிறானா? அதுவுமில்லை. இது இன்றுள்ள இன உணர்ச்சியின் நிலை.

தமிழ் மன்னர்கள் நாட்டை ஆண்ட காலத்தில் தமிழ் மக்கள் ஒருவரை ஒருவர் காணும் போது "வணக்கம்" என்றே கூறினர். பிறகு பல்லவராட்சியில் அது மாறி "நமஸ்கார"மாயிற்று. நாயக்கர் ஆட்சியில் "தாசானு தாசன்" போட்டனர். பாதுஷா ஆட்சியில் "சலாமாலேகும்" போட்டனர். வெள்ளையர் ஆட்சியில் "குட் மார்னிங்" போட்டான். வடவராட்சி வந்ததும் தமிழன் "ஜெய் ஹிந்த்" போடத் தொடங்கியிருக்கிறான். இன்னும் எவனெவன் வருவானோ? தமிழன் இன்னும் என்னென்ன போட இருக்கிறானோ? யாரால் அறிய முடியும்? எவன் நாட்டை ஆண்டாலும் அவன் மொழியில் அவனுக்கு ஒரு கும்பிடு போடுவது தனது கடமை என்று தமிழன் நினைத்துக் கொண்டிருக்கிறானே தவிர, தன்

னாட்டைத் தன் மொழியில்தான் ஆள வேண்டும் என்ற ஆசை உண்டாவதில்லை. இது இன்று தமிழனுக்குள்ள அரசியல் உணர்ச்சி.

தமிழ் நாட்டின் கடற்கரை அளவிற்கு, அதன் ஏற்றுமதி இறக்குமதி வணிகம் இல்லை. தமிழ் மக்கள் எண்ணிக்கை அளவிற்கு அதன் கைத்தொழில்கள் இல்லை. நாட்டில் இருக்கும் கனிப் பொருள்கள் அளவிற்கு அதன் சுரங்கத் தொழில் இல்லை. நாட்டின் நிலப் பரப்பு இருக்கும் அளவுக்கு உழவுத் தொழில் இல்லை. ஆலைத் தொழிலில் மட்டும் கணக்கிட்டால் பம்பாய்க்குத் தமிழ் நாடு 60 ஆண்டுகள் பிற்போக்குடையதாகக் காணப்படுகிறது. எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம், அரசியலில் பித்தலாட்டம், பொதுத்தொண்டில் மோசம், நிர்வாகத்தில் லஞ்சம், சட்டத்தில் ஊழல், உணவுப் பொருள்களில் கலப்படம், தொத்து நோய், வறுமை, பசி, பட்டினிச் சாவு முதலியவைகளே இன்று தமிழ் நாடாகக் காட்சியளிக்கின்றன. இது இந்தியா சுதந்திரம் பெற்றும், தமிழ் நாடு பெறவில்லை என்பதையே காட்டுகிறது.

நாட்டுக்கும் மக்களுக்கும் தொண்டு செய்வதில் தினசரிப் பத்திரிகைகளே தலைமை வகிப்பவை. அவற்றின் நிலை பெரிதும் வருந்தத்தக்கது. ஆங்கிலேயர்கள், ஆரியர்கள், சேட்டுகள், மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடியர்களும் கூடத் தமிழ் நாட்டிற்குள் வந்து தினசரிகளை நடத்துகின்றனர். இவர்களுக்குத் தமிழ் நாட்டைப் பற்றி தமிழ் மக்களைப் பற்றிய கவலையும் தமிழ் மொழியைப் பற்றிய உணர்ச்சியும் இருக்குமா? என்பது எண்ணிப் பார்க்க வேண்டியது ஒன்றாகும். தமிழ் நாட்டிற்கு என்று தமிழ் மொழிக்கு என்று தமிழ் மக்களுக்கு என்று தமிழ் மகனால் நடத்தப்படுகிற தமிழ்த் தினசரி ஒன்று கூடத் தமிழ் நாட்டின் தலை நகரில் இல்லை. அனைத்தும் வட நாட்டிற்காகவே நடைபெறுகின்றன. சில கட்சிக்காக, சில ஜாதிக்காக, சில சமயத்திற்காக, சில தமக்காக நடைபெறுகின்றன. பாழ்ப்பட்டுள்ள தமிழகம் இப்பத்திரிகைகளால் எவ்விதம் முன்னேற முடியும்? இது இன்றைய பத்திரிகைகளின் போக்கு.

தமிழ் மக்கள் உள் நாட்டில் மட்டும் தொல்லைப்படவில்லை. பர்மா, மலாயா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் உள்ள தமிழர்களும் தொழில் இழந்து சொத்திழந்து, உரிமை இழந்து, உயிரிழந்து, துன்பப்பட்டு வருகின்றனர். தமிழ் மக்கள், உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் இவ்வளவு துன்பங்களையும் தொல்லைகளையும் அடைவதற்குக் காரணம் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாட்டை ஆண்டு வந்த தமிழ் மக்கள் இன்று தங்கள் அரசையிழந்து அடிமையாகி நாதியற்றுப் போனதின் பொருட்டேயாகும்.

இந்தியாவின் மீது படையெடுத்த அலக்சாண்டரால் கூடத் தமிழ் நாட்டின் மீது படையெடுக்க முடியவில்லை. அசோகன் உயிரோடு இருந்த காலத்தில் கூடத் தமிழ் நாட்டில் தமிழ் மன்னர்களின் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. இன்று தமிழ் நாட்டில் தமிழரசு ஒன்று இருக்குமானால் வெளி நாட்டில் தமிழர்களுக்கு தொல்லைகள் விளையுமா? விளைவிக்க அந்தந்த அரசாங்கங்கள் தான் எண்ணுமா? எண்ணினால் அந்தந்த நாடுகள் மீது தமிழ் நாடு படையெடுக்காமல் விடுமா? என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

பிறரிடத்துக் காணப்படும் நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், தமிழ் மக்களிடத்தும் காணப்பட வேண்டும். இன்றேல் தமிழருக்கு வாழ்வில்லை. மொழிக்குச் சிறப்பில்லை. நாட்டிற்குச் செழிப்பில்லை. நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் அற்ற மக்கள் தன்னரசு பெற்று ஆண்டதாக வரலாறுகளில் இல்லை. தமிழகத்தில் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் வளர்ந்தாக வேண்டும். அதற்குரிய உணர்ச்சி இன்றே தோன்றியாக வேண்டும். அப்போது தான் தமிழ் நாட்டில் தமிழரசு தமிழ் மொழியில் தமிழர்களால் தமிழ் மக்களுக்காக நடைபெறும். அத்தகைய எதிர் காலத் தமிழரசை நீங்கள் எதிர்பார்க்க வேண்டுமென்பது எனது ஆசை.

தமிழ் நாட்டிற்கு என்று தமிழர் பேரவை ஒன்று உடனே தோன்ற வேண்டும். பன்னிரண்டு மாவட்டங்களும் அதில் பங்கு பெற வேண்டும். தன்னலங் கருதாத் தமிழர்கள் 120 பேர் அதன் செயற் குழுவாக அமைய வேண்டும். அப்பேரவையுள் கல்வி, ஒழுக்கம், விஞ்ஞானம், கணிதம், ஆராய்ச்சி, வெளியீடு, காடு, மலை, சிற்றூர்கள், கால் நடைகள், சுரங்கம், ஆலை, உழவு தொழில், கைத்தொழில், வணி

கம், வெளி நாடு, ஏற்றுமதி, இறக்குமதி, போக்குவரவு, பொருளாதாரம், இயல், இசை, நாடகம், நிழற் படம், ஓவியம் சிற்பம், அரசியல் இயக்கம், சமூக சீர்திருத்தம், பெண்கள் முன்னேற்றம், தமிழ் மருத்துவம், உடற் பயிற்சி. தொண்டர் படை, என்று 32 துறைகளாகப் பிரித்து, ஒவ்வொரு துறைக்கும், ஒவ்வொரு அமைச்சரை நியமித்து ஆக்க வேலைகளை உடனே தொடங்கியாக வேண்டும்.

தொண்டு செய்வதற்கு நாட்டுப் பற்றும், மொழிப் பற்றுமுள்ள தமிழன்பர்கள், தமிழறிஞர்கள், உணர்ச்சி மிகுந்த தமிழ் நாட்டு இளைஞர்களாகிய கட்டிளங் காளைகள், அரசியல் தலைவர்கள், சமூகத் தலைவர்கள்கள், சமயத் தலைவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் வேற்றுமைகளை மறந்து தமிழராசக ஒன்று பட்டுத் தமிழகத்திற்கென்று இப் பெரும் பணியைத் தொடங்கியாக வேண்டும்.

"பெற்ற நாட்டிற்கும், வளர்த்த மொழிக்கும் முதலில் தொண்டு செய்வோம். தாய் நாட்டையும், தாய் மொழியையும், வலுப்படுத்திக் கொண்டு, பிறகு திராவிடத்திற்கும், இந்தியாவிற்கும், ஆசியாவிற்கும், உலகத்திற்கும் தொண்டு செய்வோம்" என்ற நல்ல எண்ணம் இம் மலரைப் படிக்கின்ற மக்களின் உள்ளத்தே மலர வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

—திருச்சி கி. ஆ. பெ. **விசுவநாதம்.**

'உமா' பொங்கல் மலர்.

# தலைவர்களுக்குப் பாரதி காட்டும் வழி

பாரதியார் ஒரு மகாகவி. தமது உணர்ச்சியை வெளிப்படுத்துவதில் பேராற்றல் படைத்தவர். அவர் உள்ளத்து உள்ள உண்மை ஒளியே கவிதைகளாக மலர்கின்றன. அவர் பாடல்கள் தமிழர்களுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்தன, கொடுத்துக் கொண்டிருக்கின்றன. தேசப் பற்றையும்; தெய்வப் பற்றையும், கவிதை இன்பத்தையும் ஊட்டுகின்ற கவிஞர் அவர். பாரதியார் சிறந்த கவிதைத் தச்சர். ஒப்பற்ற சீர்திருத்தச் சிற்பி. அழுத்தமான தெய்வ பக்தர். வாய்மையும் நேர்மையும் பொருந்திய சமுதாயத்தின் வழிகாட்டி. சமுதாயத்தை வளம்படுத்த வந்த மாபெரும் தலைவராகிய பாரதியார், தலைவர்களாக உள்ளவர்களுக்கும் நல்ல வழி காட்டுகிறார்.

பாரதத் தாயின் அடிமை நிலையினை அகற்ற முயன்ற முன்னையோரில் முதல்வர் தாதாபாய் நவுரோஜி. அறிவும், திறனும், அன்பும், உறுதியும் படைத்த வீரத்தலைவர்; அவர் விற்போரில் வெற்றிகொள்ள நினைப்பது பயனற்றது எனக் கருதிச் சொற்போரால் தொண்டாற்றியவர், எல்லாவற்றிற்கும் மேலாகச் சீர்மை பொருந்திய ஒரு பண்பை அணிகலனாகக் கொண்டவர். அது என்னவென்றால், தன்னலமின்றி என்றும் பிறர் நன்மைக்கென்றே அரும்பாடு பட்ட பற்றற்ற துறவியாய் வாழ்ந்தமையே. அவற்றையெல்லாம் கண்ட பாரதியார் மனமார வாய் நிறைய வாழ்த்துகிறார். அந்தக் கவியைப் பார்ப்போம்.

"கல்வியைப்போல் அறிவும்,
அறிவினைப்போலக்
கருணையும் அக்கருணை போலப்
பல்வித ஊக்கங்கள் செய்யுந் திறனும்
ஒரு நிகரின்றிப் படைத்த வீரன்
வில்விறலாற் போர் செய்தல்
பயனிலதாம்
என அதனை வெறுத்தே உண்மைச்
சொல்விறலாற் போர்செய்வோன்;
பிறர்க்கன்றித் தனக்குழையாத்
துறவி யாவோன்"

இதன் மூலம் தலைவர்களுக்குக் கல்வியும், அறிவும், கருணையும், ஊக்கமும், தீர்க்காலோசனையும், தன்னலத் துறவும் எவ்வளவு அவசியம் என்பதைப் பாரதியார் உணர்த்துகிறார். தமிழ் இலக்கியங்களிலெல்லாம் மிகச் சிறந்த பண்பாடாகப் பேசப்படுகின்ற தன்னலத் துறவு அறிந்தின்புறத்தக்கது.

"தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந
ருண்மையானே"

இவ்வுலகம் உண்டென்று கூறுகிறது புறநானூறு. "தனக்கென்று ஒன்றுனும் உள்ளான், பிறர்க்கே உறுதிக்கு உழந்தான்" என்பது குண்டலகேசி. "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்பது மணிமேகலை. பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வழிகாட்டும் தலைவனுக்கு இந்தத் தன்னலமறக்கும் பண்பு அமையாதிருக்குமானால் அவன் தலைமை நல்ல பயனை விளைவிக்காது. அவனது தலைமையும் மக்கள் சக்தியால் மாற்றப்பட்டு விடும். எத்தனையோ பேரரசுகள் மறைந்தொழிந்ததையே இந்த உண்மையை நன்கு எடுத்துக்காட்டும். மகாகவி பாரதி

யின் இச்சத் தன்னலமறுப்பு உபதேசம் அரசியல் தலைவர்களுக்கு மட்டுமல்ல. ஆனால் சமுதாயம், சமய அறநிலையங்கள், மடாலயங்கள் முதலியவற்றின் தலைவர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக அமைந்திருக்கின்றது. துறவியினுடைய இலட்சணம் இவ்வுலகப் பொருள்களிடத்துப் பற்றின்றி வாழ்தலேயாம். ஆனால் தன்னைச் சார்ந்துள்ள தன் நாட்டினுள்ள மக்களை மறத்தல் அன்று. அறிவும், ஒழுக்கமும், அன்பும், நம்பிக்கையும் கொண்டு மக்கள் நலம்பெற வாழ வழிகாட்டிப் பணி செய்வதையே கடமையெனக் கொண்டவர் துறவிகள் என்பது கதே என்ற தத்துவ ஞானியின் அறிவுரை. "ஞானிகள் முயல வேண்டுவது உலகத்தை வெறுக்கவன்று; உலகத்தை அறியவேயாகும்" என்பது அவர் மொழி. ஈண்டு உலகம் என்பது மக்களையே குறிக்கின்றது. உலக மக்களின் நிலையறிந்து, தேவையறிந்து, அவர்கள் வளர வேண்டுவன செய்யக் கடமைப்பட்டிருக்கிறான் ஒரு உண்மையான துறவி. அதையே பாரதி "பிறர்க்கன்றித் தனக்குழையாத் துறவியாவோன்" என்று சொல்லி விளக்குகின்றார். இத்தகைய துறவிகள் இந்த நாட்டில் பெருகுவார்களானால் இம் மண்ணுலகமே விண்ணுலகமாய் மாறிவிடும்.

சில இடங்களில் பாரதியார் ஆண்டவனை நோக்கிச் செய்யும் தமது பிரார்த்தனையின் மூலம் தலைவர்களுக்குச்சிறந்த வழியைப் புகட்டுகிறார். பாரதியார் தமது சுயசரிதையைப் பாடி முடித்த பின்பு இறுதியாகப் பரம்பொருளிடம் ஒரு சில வேண்டுகிறார். அவற்றைப் பார்ப்போம்.

"அறிவிலே தெளிவு,
நெஞ்சிலே உறுதி, அகத்திலே
அன்பினோர் வெள்ளம்,
பொறிகளின்மீது தனியரசாணை,
பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம், கருமயோகத்தில்
நிலைத்திடல்,
என்றிவை அருளாய்;
குறிகுணம் ஏதும் இல்லதாய்
அனைத்தாய்க் குலவிடு
தனிப்பரம் பொருளே"

கலக்கமற்ற அறிவு, சபலமற்ற நெஞ்சு, அன்பு நிறைந்த உள்ளம், பொறிகளை அடக்கியாளும் ஆற்றல், இறைவன் திருவருள் நெறியினை மறவாத நோக்கம், இடையறாப் பணியில் ஈடுபாடு இவற்றையெல்லாம் ஆண்டவனே எனக்கு அருள்வாய் என்று வேண்டுகிறார் பாரதி. அதாவது, இவையெல்லாம் ஒரு தலைவனுக்கு இன்றியமையாது வேண்டப்படுபவை என்று அறிவுறுத்துகிறார், நவயுகத் தலைவர் பாரதி. இன்னும் ஒரு தலைவனுக்கு வேண்டிய ஒரு குணத்தையும் வெளிப்படுத்துகிறார். அது பகைமை உணர்ச்சியாகும். ஒரு தலைவன் எதைப் பகைக்க வேண்டும் என்பதை மாஜினியின் மூலமாக உணர்த்துகிறார்.

"தீயனபுரிதல், முறைதவிர்
உடைமை
செம்மைதீர் அரசியல், அநீதி
ஆயவற்று என்னெஞ்ச இயற்கையின்
எய்தும் அரும்பகை"

தீமையையும், அநியாய உடைமையையும், கொடுங்கோலையும், அநீதியையும் கண்டால் ஒரு உண்மைத் தலைவன் இயல்பாகவே அதன் மீது கோபங்கொண்டு அதை அழிக்கக் கொதித்து எழுவான் என்ற உண்மையையும் நன்கு வெளிப்படுத்துகிறார் பாரதி. மேலும் மனித உள்ளத்திலே பெரும்பாலாகத் தோய்ந்து கிடக்கும் சில தீமைகள் ஒழியவேண்டும் என்றும் வேண்டுகிறார்.

"மதிமூடும் பொய்மை
யிருளெலாம்-எனை
முற்றும் விட்டகல வேண்டும்;
ஐயம்தீர்ந்து விடல் வேண்டும்-புலை
அச்சம் போயொழிதல் வேண்டும்"

என்று சொல்லி, "உன்னைக் கோடி முறை தொழுதேன். இனி வையத் தலைமை எனக்கருள்வாய்" என்று வேண்டுகிறார். "அச்சம் கீழ்களது ஆசாரம்" என்று வள்ளுவர் பேசுகிறார். அச்சமும் சந்தேகமும், அதாவது நம்பிக்கையின்மையும் தலைவனைத் தலைமைப் பதவிக்குத் தகுதியற்றவனாக ஆக்கிவிடுகின்றன என்பதை வையத் தலைமையை வேண்டும் பாரதி நன்றாக விளக்குகிறார்.

எந்த ஒரு விஷயமும் பரபரப்பின்றி, வரவாக் கண்டு, ஆய்ந்து பார்த்து முடிவு செய்ய வேண்டியது தலைவர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுகின்ற பண்பு. இந்தப் பண்பாட்டைப் பாரதி பாஞ்சாலி சபதத்தில் அர்ஜுனன் மூலமாக உணர்த்துகிறார். சூதாட்டத்திலே தருமன் பாஞ்சாலியை வைத்துத் தோற்றுவிட்டான். பீமன் கொதித்தெழுகின்றான்; மூத்தவன் என்ற மரபையும் மறந்து கடுஞ்சொற்களைக் கொட்டுகிறான். அச்சமயத்திலே அர்ஜுனன் பீமனைத் தடுத்து நிறுத்திச் சினமான தீயறிவினால் அடாத வார்த்தைகளைச் சொல்லாதே என்று அமைதிப்படுத்திப் பின்னர் அறம் பேசுகிறான். அறம் சொல்லுவதோடு அர்ஜுனன் நிற்கவில்லை. நியதி தத்துவத்தையும் உணர்த்துகிறான். "தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்

என்ன பெயர் கொடுக்கலாம்? என்று கருதிச் 'சிவம்' என்று கொடுப்பதே பொருத்தமான, தகுதியான, உரியதான குறைபாடில்லாத பெயர் என அமைத்தனர்.

சைவ சமயத்தைச் சார்ந்தவனாதலால் ஒருபக்கமாகப் பேசுவதென்பதல்ல. எல்லாம் தழுவிக்கொண்டு ஆராய்ந்து தரம்பார்த்து எது நல்லது எனப் பிரித்துப் பேச வேண்டியிருக்கிறது. அது உலகியலுக்குப் நல்லதே. கடவுளைப் பிரமம், சர்வ வியாபி முதலிய பெயர்களாலும் குறிப்பர்; பிரமம் என்றால் பெரியது; பெரிதாயிருந்தால் நமக்கென்ன, சிறிதாயிருந்தால் நமக்கென்ன; நமக்கு வேண்டுவது நல்லதுதானே; தெய்வத்தின் ஒவ்வொரு வகையான தனிப்பண்புகளை உணர்த்துவதால் வேறு பெயர்களால் சொல்லாமல், எல்லா நல்ல பொருள்களும் குறிப்பதாகச் சிவம் எனும் ஒரு பெயரால் குறித்தனர் நம் நாட்டுச் சைவச் சான்றோர்கள். ஒப்பிட்டுப் பார்த்து அறிவால் ஆராய்ந்து பார்த்து திருப்திபடலாம், முடிவாகத் தீர்மானிக்கலாம். ஒவ்வொரு பெயரும் இயற்கையாக அப்படி அழகாய் அமைந்திருக்கிறது அதனால் பெயரினால் எந்த வகைச் சிறப்புக் குறைவுமில்லாதது சிவம்.

இன்னொரு விசேஷம் பஞ்சாக்ஷரத்திலுள்ளது. மந்திரங்களில் நல்ல அமுத ஓசையுடையது இந்த மந்திரம். சகர ஓசையில் வருவது. வல்லெழுத்துக்களில் கசதப நான்குதான் மொழிக்கு முதல் எழுத்தாக வரும். ச அமுத ஒலி. அதனால் சகர எழுத்து அமுதத்தன்மை தரும் ஒலியாக வைத்தால் சிவம் நல்ல மந்திரப் பெயர்.

சிவம் சொல்லின் மூன்று எழுத்துகளில் சி இறைவனை, வ சக்தி (அம்பிகை)யை, ம மலத்தை அல்லது உலகத்தைக் குறிப்பன. அதனால் தெய்வம், தெய்வசக்தி அவை இரண்டும் விளையாடும் இடமாகிய உலகமும் ஆக மூன்றும் சேர்ந்து விளங்கியிருப்பது சிவம். உலகம்தான் நமக்குத் தெரிகிறது. அதைக் கொண்டு தெய்வம் என்பதை அறிய வேண்டியிருக்கிறது. (சிவஞான போதத்தில் முதற் சூத்திரம் குறிப்பது) அதனால் சிவம் என்றால் தெய்வம். உலகம் வேண்டாம் உலக சக்திகள் மட்டும் வேண்டுமென்பவர் சில; உடம்பு முக்கியமில்லை; உடம்பிலுள்ள உணர்வுதான் முக்கியம் என்பவர் சில; உலகம், உடம்பு தேவை என்று எண்ணுகிற போது சிவம் எனம் சேர்த்துச் சொல்வர். சக்திதான் முக்கியம் என்று சக்தி மட்டும் கருதிப் பார்ப்பவர் சில.

இனி யோகம் ஞானம் எதற்கும் முதன்மையாக வருவது சிவா—வாசி, வாசியோகம் அப்போது யோகத்துக்கு இந்தப் பெயராலேயே சொன்னால் சிவயோகம். அப்படியே சிவஞானம். சிவம் சத்தியம், மெய், சத்து, உள்ளது, சிவ சத்து (சிவஞான போதத்தில் வருவது) உண்மைகளைத் துருவித் துருவி ஆராய்ந்து, பிரித்து 'பிரித்துப் பாகுபாடு செய்து பார்த்து, தேவை இல்லாதவைகளைத் தள்ளிவிட்டுச் சாறு எடுப்பது போல் எடுக்கச் சத்தியம (உண்மை) சித்திக்கும். அதே சிவசத்து, சிவம்.

அதனால் எல்லா நல்ல பண்புகளுக்கும், மந்திரங்களுக்கும், ஒலிகளுக்கும், வழக்குகளிலும் வருவது சிவம் சொல்; சூரியன், நாதம், பிங்கலைநாடி முதலியனவும் சிவம் குறிக்கும். விஷத்தைக்கூட, மருந்துகளில் சேர்க்கும் பொருள்களிற் சில சித்தர்கள் சிவம் எனும் பெயரால் குறித்திருக்கின்றனர். அதனால் தலைசிறந்த பண்பு, பொருள், ஒலி முதலிய எல்லாவற்றிற்கும் பொருத்தமான பெயராக, எல்லாவற்றிற்கும் அடிப்படை மூலமான இறைவனைக் குறிப்பதாயிருப்பது சிவம்.

இனி வடிவம் அடுத்துப் பார்க்கலாம்.

(தொடரும்)

Phone. 5503·4 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. ச. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்)

லும்" என்ற அழியாத உண்மையை அறிவுறுத்துகிறான். தருமத்திற்கு மாறானவை அப்போதைக்குத் தலைதூக்கி நின்றாலும் அது வெற்றியாக மாட்டாது என்பதைத் தலைவர்கள் நன்கு உணர்ந்து செயலாற்ற வேண்டும். சகிப்புத்தன்மையே சாசுவத வெற்றிக்கு அடிப்படை என்ற எண்ணம் அர்ஜுனனுக்கு. ஆயினும் அவன் வீரவுணர்வும் தன்னம்பிக்கையும் மாய்ந்துவிடவில்லை. பாடலைப் பார்ப்போம்.

"தருமத்தின் வாழ்வதனைச்
சூதுகவ்வும்; தருமம்
மறுபடி வெல்லும் எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதி
இந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலுங்
காண்போம், இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம்
காலம் மாறும்
தருமத்தை அப்போது
வெல்லக் காண்போம்,
தனுவுண்டு காண்டீபம்
அதன் பெயர்"

என்கிறான். தரும நம்பிக்கையும் அத்தோடு தன்னம்பிக்கையும் தலைவர்களுக்கு எவ்வளவு அவசியம் என்பதை வையத் தலைவன் பாரதி நன்றாக எடுத்துக் காட்டுகிறான். இல்லையா?

(வரும்)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# * சிவம் *

(மோகனரங்கன்)

சில நாட்களுக்கு முன் சிந்தாதிரிப்பேட்டை ஆதிபுரீஸ்வரர் கோயில் வார வழிபாட்டவையில் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் தலைமையில் நம் ஆசிரியரவர்கள் அருளிய அமுத மாரியின் தொகுப்பு. அன்று கலந்துகொள்ள வாய்ப்பில்லாத பல குருகுல அன்பர்களுக்காகவே ஐயாவின் மணிவாக்கில் ஒரு மணியும் சிந்தாமல் கோக்க எத்தனிக்கிறேன்.

"இன்று சைவச் சான்றோர்களின் முன்னிலையில் பேசும்படியான வாய்ப்பு கிடைத்திருப்பது பற்றி மகிழ்ச்சி; பேசுவதற்காகக் குறித்துள்ள பொருள் 'சிவம்' என்பது. சிவத்தைப் பற்றி வேறெங்காவது பேசினாலும் பேசலாம், சிவத்தின் திருமுன்னிலையிலேயே பேசுவதென்றால் பயமாயிருக்கிறது சிவ வடிவமான கோலம் பூண்டிருக்கும் தலைவரும் வேறு இருக்கிறார். இந்த இடத்தில் சம்பந்தப்பட்டிருப்பவர் பெயர்களிலும் சிவம் (மறைஞான சிவம், மாமணி சிவம் முதலியோர்) சம்பந்தப்பட்டிருக்கிறது. சிவம் சகோதரர்கள் மத்தியில் பேச இருக்கிறேன்.

சிவம், பேச்சுக்கும் மனத்திற்கும் எட்டாத தன்மையிலுள்ள பொருள். பேச்சுக்கு எட்டாததைப்பற்றிப்பேச அச்சம்தோனிக்கிறது. பேசப் புகுந்த பிறகு ஏதோ கொஞ்சம் பேச முயற்சிக்கிறேன். நிலை, அறிவு நிலை; அதனால் அறிவால் எட்டுகிற வரை பேசலாம்.

சிவத்தை மூன்று வகையாகப் பகுத்துக் கொண்டு பேச எண்ணம்; அதன் பெயர்ச் சிறப்பு; அதன் வடிவச் சிறப்பு; அதனால் நமக்குப் பயன் என்ன? என்பன.

சிவம் எனும் சொல் நல்ல கருத்துக்கள், நல்ல பண்புகளெல்லாம் குறிக்கும்; நன்மை, இன்பம், மங்கலம், உண்மை, செம்மை; துன்பம் தீமை நீங்கியவையெல்லாம்; எவையெல்லாம் நல்ல அர்த்தம் கொடுப்பனவோ அவையெல்லாம் சிவம் என இந்த நாட்டினர், நல்ல பண்புகளுக்கெல்லாம் ஒரு பெயர் தேர்ந்தெடுத்திருப்பது இந்த நாட்டின் பாக்கியம்; இந்த நாடு எவ்வளவு நல்ல ஆழ்ந்த அறிவார்ந்த போக்குள்ளது என்பதற்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறது.

எந்த நல்ல பொருளுக்கும் சிவம் என்று பெயர்—குணம், கலை, இசை, மந்திரம், நிறம், யோகம், ஞானம்; சிறந்தது எதிலும், சிவம் தொடர்புள்ளது. நல்ல மந்திரம் சிவ மந்திரம், நல்ல ஓசை சி எனும் ஒலி; அதனால் நிறம், பண்பு, சொல் எதுவானாலும் நல்லவையெல்லாம் குறிப்பதற்காக இந்த நாடு ஒரு சொல்லாகத் தேர்ந்தெடுத்திருப்பது சிவம்.

சமண் மதத்தினரும், புத்த மதத்தினருங் கூடக் கடைசியில் தாம் பெறும் பேறு சிவம் எனும் சொல்லால் குறித்துள்ளதைச் சிலப்பதிகாரம் மணிமேகலைகளில் பார்க்கலாம். அதனால் நல்லவைகளுக்கெல்லாம் இருப்பிடம் இறைவன் என்றால் அவனுக்கு